**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

அசல் வழக்கு எண். 74/2016

நாள் 01.06.2023

பெயர்.பாஸ்கரன் த/பெ.சுப்பிரமணி

வா.சா1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

1. நாங்கள் ஸ்ரீராதா ருக்மணி வேணுகோபால கிருஷ்ண சாமி கோவில் டிரஸ்ட்யை பதிவு செய்வதற்கு முன்பகவே கோவில் கட்டி முடிக்கபட்டுவிட்டது என்றால் சரிதான். மேற்படி டிரஸ்ட் பத்திரத்தில் கோவிலின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை காண்பித்துள்ளோமா என்றால் காண்பிக்கவில்லை அந்த சமயத்தில் பத்திரம் பதிவு செய்யும்போது சொத்துக்களை காண்பிக்க முடியாது என்று கூறிவிட்டார்கள்.

2. கோவிலுக்காக வாங்கப்பட்ட நிலத்திற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். கோவில் கட்டியதற்கு வரவு செலவு கணக்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எங்கள் டிரஸ்ட் கோவில் கட்டுவதற்கு அரசிடம் எந்தவிதமான அனுமதியும் பெறவில்லை ஆனால் மின்சார இணைப்பு வங்குவதற்கு தாசில்தாரிடம் அனுமதி பெற்றுள்ளேன்.

3. மேற்படி மின்சார இணைப்பு ஸ்ரீகிருஷ்ண டிரஸ்டி என்ற பெயரில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.8 முதல் 22 வரை ஆவணங்களில் டிரஸ்டி என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மின்சார அலுவலகத்தில் அவ்வாறு தான் ரசீது வரும் என கூறிவிட்டார்கள். வா.சா.ஆ.23 பட்டாவில் வாதி டிரஸ்ட் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.24 முதல் 26 வரை உள்ள உத்தரவு மற்றும் தீப்பாணைக்கும் இவ்வழக்கின் வழக்கு மூலத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.27 மற்றும் வா.சா.ஆ.28 புகைப்படங்கள் என்னால் இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. திருவிழா செய்வதை யாரலும் தடை செய்ய முடியாது என்றால் சரியல்ல. பொதுவாக கோவில் டிரஸ்ட் ஆனது கணக்கு வழக்குகளைப் பார்க்க வேண்டுமே தவிர பொது மக்கள் வழிபடுவதையும் மற்றும் திருவிழா நடத்துவதையும் தடைசெய்ய முடியாது என்றால் சரிதான். நான் செய்துவந்ததை தடை செய்ததால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

S.Baskaran.

Scanned with OKEN Scanner

5. என்னை யாரும் தடை செய்யவில்லை என்றாலும் நான் தான் போலீஸில் புகார் கொடுத்தும் தடை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் உத்தரவுக்கு இணங்க வட்டாட்சியர் விசாரணை செய்து கோவிலை உண்மையில் நிர்வாகிக்கும் நபர்களிடம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி பலன் எனக்கு கிடைக்கததால் தான் நான் இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வட்டாட்சியர் ஒரு வருடம் என்னை தொடர்ந்து நிர்வாகம் செய்ய வேண்டும் என்றும் அதன் பிறகு பிரதிவாதிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் கூறிவிட்டார் அதற்கு உடன்படததால் தான் நான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

6. கோவிலில் நான் சீட்டு நடத்தி விட்டு பிரதிவாதிகள் சீட்டு நடத்துவதாக சத்திய பிரமாண வாக்கு மூலத்தில் பத்தி 6 மற்றும் 7 குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி சீட்டில் பிரதிவாதிகள் இருந்ததால் தான் கடனுறுதி சீட்டு வழக்கு ஆரணி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இன்றிய தேதி வரை பிரதிவாதிகள் தான் கோவில் நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. கோவில் ஆரம்பித்தில் இருந்து தற்போது வரை பிரதிவாதிகள் தான் வரவு செலவு கணக்கு நிர்வாகித்து வருகிறார்கள் எனறால் 2017 ஆண்டு வரை நான் தான் பார்த்து வந்தேன் அதன் பிறகு சண்டை வந்து என்னை வெளியே அனுபிவிட்டார்கள். நான் வழக்கு தாக்கல் செய்துவிட்டுபின்பு பிரதிவாதிகள் தான் கோவில் நிர்வாகத்தைப் பார்த்துவருகிறார்கள்.

7. நான் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னபாக கணக்கு வழக்குகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். எனக்கும் கோவிலுக்கும் எந்த தொடர்பும் இல்லையென்றாலும் மற்றும் எந்த நிர்வாகமும் நான் செய்துவரவில்லை என்றாலும் சரியல்ல. நான் செலவு செய்த ரூ45,000/- பெற்றுக்கொண்டு முன்பே பிரதிவாதிகளை எந்த தொந்தரவும் செய்யமட்டேன் என்று விலகி சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல.

8. இவ்வழக்கில் இடைகால மனு தாக்கல் செய்து விட்டு பின்பு கூட திருவிழா நடத்துவதற்கு கோவிலுக்குள் செல்லவில்லை என்றால் சரியல்ல 2017 ஆண்டுக்கு பின்பு என்னிடம் இருந்து நிர்வாகத்தை பரித்துவிட்டார்கள். கோவில் உள்ள நிலத்தின் கிரய பத்திரமானது பிரதிவாதிகளின் டிரஸ்ட் பெயரில் தான் இருக்கிறது என்றால் சரிதான் ஆனால் அந்த கிரய பத்திரம் தவறானது ஆகும். 2009 ஆண்டே கோவில் கட்டி கும்பிஷேகம் நடைபெற்றுவிட்டது. நான் கூறுவது போல சாலை போரம்போக்கு நிலத்திற்கு கிரய பத்திரம் கொடுக்க முடியாது என்றாலும் சாலை போரம்போக்கு என்று தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 மற்றும்

S. Baskaran.

Scanned with OKEN Scanner

வா.சா.ஆ 7ஆவணமானது வழக்கிற்கு பின்னிட்டு என்னால் தயார் செய்யபட்டவை என்றால் சரியல்ல.

9. வா.சா.ஆ.4 ஆவணமானது பிரதிவாதிகளின் டிரஸ்ட்யை ரத்து செய்ய முடியாது என அனுப்பட்ட பதில் கடிதம் என்றால் சரிதான் அதில் நீதிமன்றத்தில் மூலமாக உத்தரவு வாங்கி வருங்கள் என்று கூறிவிட்டார்கள். 1ம் பிரதிவாதி மீது அசல் வழக்கு எண் 165/2017 மற்றும் 131/2016 என வழக்குகள் ஆரணி சார்பு நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி முன் வழக்குகளில் விரோதத்தின் காரணமாக இவ்வழக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோவிலை நிர்வாகிக்கிறேன் என்றபதற்கான அடிப்படை முகந்திரம் ஏதுவும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்த ஆவணம் ஏதுவும் எனக்கு சாதகமாக இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கோவிலை நிர்வாகிப்பதால் எனக்கு எந்தவிதமாக இழிப்பு மற்றும் பாதிப்பு இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல.

S. [signature]

Taken Down before by me in open court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

P.T. [signature] 01.06.23

District Munsif
Arni.

Scanned with OKEN Scanner